# சத்தியில் பிளஸ் 2 மாணவர்களுக்கு ஆலோசனை

**சத்தியமங்கலம், ஏப். 24:** சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக் கல்லூரியில், பிளஸ் 2 மாணவர்களுக்கான உயர்கல்வி குறித்து ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதன்மை அலுவலர் ஏ.எம்.நடராஜ் தலைமை வகித்தார். முதல்வர் டி.சரவணன் வரவேற்றார்.

இதில், கலந்துகொண்ட உயர்கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி பேசியதாவது: 2019-ஆம் ஆண்டில் 17 லட்சம் பொறியாளர்கள் கல்லூரிகளில் இருந்து படிப்பை முடித்து வெளியே வந்தாலும், அதில் 3 லட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, கல்லூரிகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் வேண்டும். கணிப்பொறியியல், அமைப்பியல், மின்னியல், மின்னணுவியல் இந்த மூன்று பிரிவுக்கும் அதிக வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. ஆங்கிலம் கற்றுக்கொள்வதுடன் பொதுஅறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் வருவாய் நோக்குடன் படிப்பது தவறு. பொருளாதாரம், சட்டப்படிப்புக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்றார்.

இதில் சத்தி, கோவை, கோபி, ஈரோடு, பெருந்துறை உள்ளிட்ட இடங்களில் இருந்து 574 மாணவர்கள் கலந்துகொண்டனர்.



மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து ஆலோசனை வழங்குகிறார் கல்வியாளர் ஜெயப்பிரகாஷ் காந்தி.